# அறந்தாங்கி நகராட்சி

## நகர்மன்ற கூட்ட நிகழ்ச்சி நிரல்

## ஸ்ரீ சார்வரி வருடம் ஐப்பசி மாதம் 21–ஆம் நாள் நவம்பர் மாதம் 06.11.2020ம் நாள் வெள்ளி கிழமை காலை 11.30 மணிக்கு நடைபெற உள்ள அவசர கூட்டப் பொருள் விபரம்

**பொருள் எண்.1**

அறந்தாங்கி நகராட்சி எல்லைக்குட்பட்ட சாலைகள் பருவ மழை மற்றும் இயற்கை இடர்பாடுகளால் பழுதடைந்துள்ளது குறித்தும் மேற்படி சாலைகளை புதுப்பிக்க கோரியும் பல்வேறு தரப்பிலிருந்தும் கோரிக்கைகள் வந்துள்ளதை அடுத்து சிறப்பு சாலைகள் திட்டத்தின் 2020–2021ன் (SRP- 2020-2021) கீழ் ரூ.600.00 லட்சத்திற்கு நிதி ஒதுக்கீடு கோரி, கீழ் கீழ்கண்டுள்ளவாறு தேர்வு செய்யப்பட்டுள்ள பழுதடைந்த சாலைகளை புதுப்பிக்க அனுமதியும், மேற்படி திட்டத்தின் கீழ் பணிகள் மேற்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களிடம் நிர்வாக அனுமதி பெற கருத்துரு பிரேரனை அனுப்பிட மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது

**பணிகள் விபரம்**

| வ.எண் | வார்டு எண் | சாலை பணிகள் மேற்கொள்ளும் பகுதிகளின் விபரம் | பணியின் தன்மை | சாலையின் நீளம் கி.மீ. | சாலையின் அகலம் மீ. | மதிப்பீடு தொகை ரூ. லட்சத்தில் |
|---|---|---|---|---|---|---|
| **சிப்பம் –1** | | | | | | |
| 1 | 01,03, 05, 06,16, 21,23, 27 | ராஜன் நகர், வி.எஸ்.ஆர். மற்றும் குறுக்கு சாலை, கணபதி நகர், கோட்டை –1, காரைக்குடி ரோடு வசந்தம் மஹால் அருகில், வீரமாகாளியம்மன் கோவில் ரோடு, அருகன் குளம், அண்ணா நகர், அக்னி பஜார் கம்மங்காடு ரோடு மற்றும் கள்ளி சந்து பழைய மின்வாரிய அலுவலக சாலை மணிவிளான் 5ம் வீதி குறுக்கு தெரு, எழில் நகர்15, தாரணி நகர் எழில் நகர் 4, தார் சாலை அமைத்தல் | தார் சாலை | 4.568 | 4.00 | 200 |
| | | கூடுதல் | | 4.568 | | 200.00 |

**தீர்மான எண்:–** 85

**தீர்மானம்:–** அலுவலக குறிப்பு 1, 2 ஏற்று அனுமதிக்கப்பட்டது

## சிப்பம் –2

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | 03,04, 05,06, 10,11,12,17,22, 24,25, 27 | சட்டமன்ற உறுப்பினர் அலுவலக சாலை, பட்டுக்கோட்டை ரோடு அலெக்ஸ் பாத்திரகடை குறுக்கு சாலை, புது நகர் சாலை, நவித் காலணி சாலை, தாரணி நகர், எல்.என்.புரம் சன்னதி வயல் பிள்ளையார் கோவில் அருகில், ராம காந்தி கல்யாண மண்டபம் சாலை எல்.என்.புரம் –3சாலை, (அக்ரஹாரம் ) ரெங்கோஜிபாவா தெரு. ராஜாஜி நகர், எல்.என்.புரம் தென்றல் நகர் இ.பி. காலணி, எல்.என்.புரம் –3 ராம காந்தி கல்யாண மண்டம் முதல் சுடுகாடு வரை, வளையல்காரத் தெரு, எல்.என்.புரம் நீதி மன்றம் அருகில், எழில் நகர் 15ம் வீதி, அப்துல் ஹமீது குறுக்கு தெருக்களில் தார்தளம் அமைத்தல் | தார் தளம் | 4.509 | 4.00 | 200 |
| | | கூடுதல் | | 4.509 | | 200.00 |

## சிப்பம் –3

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | 02,03,05,11, 13,21,24,25 | எழில் நகர்–6வது தெரு, எழில் நகர் –8வது தெரு, எழில் நகர் வீரானார் கோவில் எதிர் சாலை, வடிவேல் பிள்ளை குறுக்கு சந்து, பசுமை இல்லம் குறுக்கு சாலை கோட்டை–6ம் வீதி, களப்பகாடு –2வது சாலை, களப்பகாடு 3வது சாலை, மணிவிளான் 5வது குறுக்கு சாலை, கேட்டை–1 பைப்லைன் குறுக்கு சாலை, எல்.என்.புரம் குறுக்கு சாலை நீரேற்று நிலையம் அருகில், மணிவிளான் 1 , அப்துல் கமீது குறுக்கு தெரு, கடை வீதி 2, களப்பகாடு –3வது குறுக்கு சாலை மற்றும் | பேவர் பிளாக் சாலை, சிமெண்ட் சாலை மற்றும் தார் சாலை | 4.007 | 3.00 முதல் 5,00 | 200 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | சன்னதிவயல் –1வது சாலைகளில் ஜீவா தெரு, வி.எஸ்.ஆர். நகர் குறுக்கு தெரு, வீரமாகாளியம்மன் கோவில் குறுக்கு தெரு, பைப்லைன் ரோடு, பெரியார் டேங்க் அருகில் , சிலோன் காலணி, சிமெண்ட் கான்கிரீட் பாவர் பிளாக் சாலை அமைத்தல் கோட்டை2 சிவன் கோவில் தெருவில் தார் சாலை அமைத்தல் | | | | |
| | | கூடுதல் | | 4.007 | | 200.00 |
| | | **மொத்த திட்ட மதிப்பு** | | | | **600.00** |

<u>அலுவலக குறிப்பு.</u>

1. மதிப்பீடுகளுக்கு மன்றம் அனுமதிக்கலாம்
2. சிறப்பு சாலைத் திட்டம் 2020–2021 (SRP 2020-2021) ன் கீழ் முழு மான்யமாக நிதி ஒதுக்கீடு வழங்கிட கோரி நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு கருத்துருக்கள் அனுப்பிட மன்றம் அனுமதிக்கலாம்.

**ஓம்/–ஜீ.சுப்ரமணியன்**
**தனி அலுவலர்**
**அறந்தாங்கி நகராட்சி**

# அறந்தாங்கி நகராட்சி

## நகர்மன்ற கூட்ட நிகழ்ச்சி நிரல்

## ஸ்ரீ சார்வாரி வருடம் கார்த்திகை மாதம் 15–ஆம் நாள் நவம்பர் மாதம் 30.11.2020ம் நாள் திங்கள் கிழமை மாலை 4.00 மணிக்கு நடைபெற உள்ள சாதாரண கூட்டப் பொருள் விபரம்

| | | |
|---|---|---|
| **பொருள் எண். 1** | நகராட்சி பொறியாளர் மற்றும் ஆணையர் (பொ) அவர்களின் அக்டோபர்–2020ம் மாதத்திற்கான நாட்குறிப்பு பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு:–**<br><br>பதிவு செய்யலாம் | **தீர்மான எண்:–** 86<br>**தீர்மானம்:–** பதிவுசெய்யப்பட்டது |
| **பொருள் எண். 2** | நிவர்புயல் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் அதிக மழையினால் பாதிக்கக்கூடிய பகுதிகளான தாழ்வான பகுதிகளில் மழைநீர் செல்ல ஏதுவாக அடைப்புகளை சரி செய்யவும், தொடர்ச்சியாக வடிகால்களை துார் வாரி மழைநீர் செல்லுமாறு செய்யவும், மேலும் தாழ்வான பகுதிகளில் தேங்கும் மழைநீரை டீசல் என்ஜின் மூலம் வெளியேற்ற வேண்டியுள்ளது. இரவு நேரங்களிலும் தொடர்ச்சியாக பணி மேற்கொள்ளமாறு மின் தடை ஏற்படும் நேரங்களில் ஜெனரேட்டர் கொண்டு குடிநீர் வழங்கும் பணிகள் மேற்கொள்ளவேண்டியுள்ளது. தமிழக அரசின் பேரிடர் மோலண்மை செயளாலர், நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை, மாவட்ட ஆட்சித் தலைவர், புதுக்கோட்டை அவர்களின் வழிகாட்டுதல் உத்திரவின்படி மேற்கொண்ட பணிகள் செய்ய கீழ் கண்டுள்ளவாறு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது. | **தீர்மான எண்:–** 87<br>**தீர்மானம்:–** அலுவலக குறிப்பு 1, 2 ஏற்று அனுமதிக்கப்பட்டது |

| வ.எண். | பணிகள் விவரம் | உத்தேச மதிப்பீடு (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | Generator | ரூ.2.50 |
| 2 | Diesel Engine | ரூ.3.00 |
| 3 | Lime Powder | ரூ.1.00 |
| 4 | Bleaching Powder | ரூ.2.00 |
| 5 | Hypo Chlorine | ரூ.1.50 |
| | மொத்தம் | ரூ.10.00 |

மேற்கண்ட பணிகளை செய்ய ஆகும் உத்தேச செலவுத் தொகை ரூ.10.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு :–</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவினம் நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

| | | |
|---|---|---|
| **பொருள் எண். 3** | அறந்தாங்கி நகராட்சி எல்லைப் பகுதிகளில் தற்போது மழைகாலமாக இருப்பதால் டெங்கு நோய் பரவாமல் தடுக்க டெங்கு நோய் தடுப்பு பணிகளுக்காக DBC பணியாளர்களை நியமித்து பணிபுரிந்து வருகின்றனர். எனவே DBC பணியாளர்களுக்கு 2020 ஆம் ஆண்டிற்கான நவம்பர் மற்றும் டிசம்பர் 2020 மாதங்களுக்கு ஊதியம் வழங்குவதற்கு ஆகும் உத்தேச செலவினம் தொகை ரூ. 8.00 லட்சத்திற்கு ( ரூபாய் எட்டு லட்சம் மட்டும் ) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. | **தீர்மான எண்:–** 88<br>**தீர்மானம்:–** அலுவலக குறிப்பு 1, 2 ஏற்று அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | **<u>அலுவலகக்குறிப்பு:–</u>**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. பொது நிதியில் இருந்து இப்பணிகள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம் | |
| **<u>பொருள் எண். 4</u>** | அறந்தாங்கி நகராட்சி தூய்மை இந்தியா திட்டத்தின்கீழ் பொது கழிப்பிடங்களை பராமரிப்பு செய்ய 22 ஒப்பந்த பணியாளர்களை நியமித்து பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. பணியாளர்களுக்கு நவம்பர் மற்றும் டிசம்பர் 2020 ஊதியம் வழங்குவதற்கு ஆகும் உத்தேச செலவினம் தொகை ரூ. 8.00 லட்சத்திற்கு ( ரூபாய் எட்டு லட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலகக்குறிப்பு:–</u>**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. பொது நிதியில் இருந்து இப்பணிகள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். | **<u>தீர்மான எண்:–</u>** 89<br>**<u>தீர்மானம்:–</u>** அலுவலக குறிப்பு 1, 2 ஏற்று அனுமதிக்கப்பட்டது |
| **<u>பொருள் எண். 5</u>** | அறந்தாங்கி நகராட்சி எல்லைப் பகுதிகளில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் தூய்மை பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் பணிபுரிந்து வருகின்றனர். அவர்களுக்கான ஊதியம் வழங்க அக்டோபர் 2020 மாதத்திற்கான உத்தேச செலவினம் தொகை ரூ. 10.00 லட்சத்திற்கு (ரூபாய் பத்து லட்சம் மட்டும் ) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலகக்குறிப்பு:–</u>**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. பொது நிதியில் இருந்து இப்பணிகள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம் | **<u>தீர்மான எண்:–</u>** 90<br>**<u>தீர்மானம்:–</u>** அலுவலக குறிப்பு 1, 2 ஏற்று அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| **<u>பொருள் எண். 6</u>** | அறந்தாங்கி நகராட்சி தூய்மை இந்தியா திட்டத்தின் இரண்டாம் பகுதியான SBM 2.0ன் 15 வது நிதிக்குழு நிதித் தொகை பெற்றிட குப்பையில்லா நகராட்சிக்கான மூன்று நட்சத்திர அங்கீகாரம் (3 Star Rating) பெற்றிட தெரிவிக்கப்பட்டுள்ளது. நமது நகராட்சி பகுதியில் அனைத்து வார்டுகளிலும் மின்கல இயக்கு வாகனங்கள் (BOV) மற்றும் இலகு ரக வாகனங்கள் (LCV) மூலம் குப்பைகள் தரம் பிரித்து சேகரிக்கப்பட்டு நுண் உரக்கூட மையங்களுக்கு கொண்டு செல்லப்பட்டு அறிவியல் முறைப்படி குப்பைகள் கையாளப்பட்டு இறுதியாக்கம் செய்யப்பட்டு வருகிறது.இதனை தொடர்ந்து குடிமக்கள் பிரதிநிதிகள், முன்னால் வார்டு நகர்மன்ற உறுப்பினர்கள் மற்றும் பெருமளவு குப்பைகள் உருவாக்குபவர்களிடம் சுய உறுதிமொழி சான்று பெறப்பட்டுள்ளது. எனவே இந்நகராட்சி பகுதியில் திடக்கழிவு மேலாண்மை திட்டப் பணிகள் 100% சிறப்பான முறையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது என்ற விபரத்தினை பொதுமக்களின் ஆட்சேபனைக்கு அறிவிப்பினை தினசரி நாளிதழில் விளம்பரம் செய்தி வெளியிடுவதற்கும் அதற்கான செலவின தொகைக்கும் மன்றத்தின் அனுமதிக்கு.<br><br>**<u>அலுவலகக்குறிப்பு:–</u>**<br><br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. இந்நகராட்சி பகுதியில் திடக்கழிவு மேலாண்மை திட்டப் பணிகள் 100% சிறப்பான முறையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது, என்ற விபரத்தினை பொதுமக்களின் ஆட்சேபனை கோரி தினசரி நாளிதழில் விளம்பரம் செய்தி வெளியிடுவதற்கு மன்றம் அனுமதிக்கலாம்<br>3. பொது நிதியில் இருந்து இப்பணிகள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம் | **<u>தீர்மான எண்:–</u>** 91<br>**<u>தீர்மானம்:–</u>** அலுவலக குறிப்பு 1, 2,3 ஏற்று அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| **<u>பொருள் எண். 7</u>** | தமிழக அரசின் புரட்சித்தலைவி அம்மா விரிவான விபத்து மற்றும் ஆயுள் காப்பீடுத் திட்டம் வறுமைக்கோட்டிற்கு கீழ் உள்ளவர்களுக்கு செயல்படுத்தப்படும் என்று ஊரக வளர்ச்சி (மற்றும் ) ஊராட்சித் ( ம.அதி.3) துறை அரசு ஆணை (நிலை) எண்.170 நாள்.27.10.2020அரசாணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.<br>அதன்படி வறுமைக்கோட்டிற்கு கீழ் உள்ளவர்களிடம் கூடுதல் விபரங்களை பெற்று மகளிர் மேம்பாட்டு ஆணையத்தின் TIPPS (www.tipps.in) வலைதளத்தில் பதிவேற்றம் செய்ய நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை 28, மாவட்ட ஆட்சித் தலைவர், புதுக்கோட்டை மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், தஞ்சாவூர் அவர்களால் நடத்தப்பெற்ற மேற்படி திட்டம் தொடர்பான ஆய்வுக்கூட்டங்களில் அறிவுறுத்தப்பட்டது. மேலும் மேற்படி செயல்பாடுகளை குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் முடிக்கவும் தெரிவிக்கப்பட்டது.<br>மேற்படி வலைதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்து படிவங்களை பிரிண்ட் செய்யவும் மேற்படி பெறப்பட்ட படிவங்களை பூர்த்தி செய்திட உரிய விபரங்களை பெறுவது (பயனாளிகளின் ஆதார் அட்டை நகல், வங்கி பாஸ் புத்தகம் நகல், குடும்ப அட்டை நகல், நாமினி மற்றும் குடும்ப உறுப்பினர்களின் மேற்படி விபரங்கள்) அவசியமாகிறது. மேற்படி பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை வலைதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட வேண்டும்.<br>இந்நகராட்சியில் ஆய்வுக் கூட்டங்களில் தெரிவிக்கப்பட்டது போல் குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் படிவங்களை பிரிண்ட் செய்வதற்கும், பூர்த்தி செய்வதற்கும், வலை தளத்தில் பதிவேற்றம் செய்வதற்கும் போதுமான கணினி மற்றும் டேட்டா என்ட்ரி ஆப்பரேட்டர்கள் இந்நகராட்சியில் இல்லாததால் மேற்படி நடவடிக்கைகளை தனியார் கணினி மையங்கள் மற்றும் வெளியிலிருந்து டேட்டா என்ட்ரி ஆப்பரேட்டர்களை கொண்டு மேற்கொள்ள அனுமதிக்கும் அதற்கான செலவினம் ரூ.2.50 லட்சத்திற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது,<br>**<u>அலுவலக குறிப்பு</u>**<br>மன்றம் அனுமதிக்கலாம் | **<u>தீர்மான எண்:–</u>** 92<br>**<u>தீர்மானம்:–</u>** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| **<u>பொருள் எண். 8</u>** | நகரமைப்பு பிரிவு – அறந்தாங்கி நகராட்சி எல்லைக்குட்பட்ட எல்.என்.புரம் வார்டு–டி பிளாக்–23 நகரளவு எண்.T.S. No.10/9A,9B(பழைய சர்வே எண்.228/7) 9500 சதுர மீட்டர் பரப்பளவுள்ள மனையிடத்திற்கான அரசால் மறு ஆய்வு ஒப்புதலளிக்கப்பட்ட அறந்தாங்கி முழுமைத் திட்டத்தில் விவசாய உபயோகப் பகுதியில் இருந்து குடியிறுப்பு உபயோக பகுதியாக நில உபயோக மாற்றம் பெற வேண்டி திரு.மணிகண்டன் மற்றும் திருமதி. சிந்தாமணி அவர்கள் விண்ணப்பத்தின் பேரில் உதவி இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகத்தில் இருந்து மறு ஆய்வு ஒப்புதலளிக்கப்பட்ட அறந்தாங்கி முழுமைத் திட்டத்தில் விவசாய உபயோக பகுதியில் இருந்து குடியிறுப்பு உபயோக பகுதியாக நில உபயோக மாற்றத்திற்கு ஆங்கிலம் மற்றும் தமிழ் செய்திதாள் விளம்பரம் செய்திடவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.50,000/– (ரூபாய் ஐம்பதாயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**<u>அலுவலக குறிப்பு–</u>**<br><br>மன்றம் பார்வையிட்டு அனுமதிக்கலாம். | **<u>தீர்மான எண்:–</u>** 93<br>**<u>தீர்மானம்:–</u>** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது |
| **<u>பொருள் எண். 9</u>** | இந்நகராட்சி கலவை உரக்கிடங்கின் உட்புறம் குப்பை குவியல்களை உயிரி செயலாக்கத்தின் (Bio Mining) மூலம் நிலத்தினை மீட்கும் பணி நடைபெற்று வருகிறது. அதன் படி குப்பைகளை வேறு இடத்திற்கு மாற்றப்பட்டுள்ளளது. அந்த பகுதியில் கசடு கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் சுத்திகரிப்பு நிலையம் (FSTP) அமைக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்படி பணி நடைபெற குப்பைகள் அகற்றிட அனுமதிக்கும், அதற்காக தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.6.00 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. | **<u>தீர்மான எண்:–</u>** 94<br>**<u>தீர்மானம்:–</u>** அலுவலக குறிப்பு 1,2,3 ஏற்று அனுமதிக்கப்பட்டது |

பணியின் அவசர அவசியம் கருதி பணிக்கு 30.11.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்டுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன அவை

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் | சதவிகிதம் |
|---|---|---|
| 1) | திரு.எஸ்.ரமேஷ்,<br>நகராட்சி ஒப்பந்ததாரர் | 0.09 % குறைவு |
| 2) | திரு.எஸ். கோபி,<br>நகராட்சி ஒப்பந்ததாரர் | 1.76 % அதிகம் |

<u>அலுவலகக்குறிப்பு:–</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. பொது நிதியில் இருந்து இப்பணிகள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்
3. குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய திரு.எஸ். ரமேஷ், நகராட்சி ஒப்பந்ததாரருடைய ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம். (ந.க.எண்.3232/இ1/2020)

**ஒம்/–ஜீ.சுப்ரமணியன்**
**தனி அலுவலர்**
**அறந்தாங்கி நகராட்சி**